IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.
O.S.NO.112/2017

| DEPOSITION OF WITNESS: | DW1 |
|---|---|

| | | | |
|---|---|---|---|
| NAME: | **Sundaram** | RELIGION: | Hindu |
| FATHER NAME: | Kasi Gounder | CASTE: | MBC |
| VILLAGE: | Kakathopu | OCCUPATION: | FORMER |
| TALUK: | Gudiyattam | AGE: | 62 |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 20.01.2023

1.நான் இந்த வழக்கில் வாதி என்னுடைய நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன் அதை எனது தரப்பு சாட்சியாக ஏற்றுக்கொண்டு கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

2.பி.சா.ஆ.2 முதல் பி.சா.ஆ.9 வரை ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது.

3,வாதி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.

| S.No. | Description of Documents |
|---|---|
| 1 | பி.சா.ஆ.2 01.12.1964 அன்று பாகபத்திர எண்.318/1952 |
| 2 | பி.சா.ஆ.3 11.10.1966 கிரையப்பத்திர எண்.3470/1966 |
| 3 | பி.சா.ஆ.4 கிரையபத்திர எண்.4191/1971 |
| 4 | பி.சா.ஆ.5 சீனிவாசன் பெயரில் உள்ள பட்டா எண்.605 |
| 5 | பி.சா.ஆ.6 சீனிவாசன் பெயரில் உள்ள பட்டா புக் எண்.171 |
| 6 | பி.சா.ஆ.7 அந்த பற்றுகை சம்மன் |
| 7 | பி.சா.ஆ.8 வில்லங்க சான்று 01.01.1975 - 06.09.2018 |
| 8 | பி.சா.ஆ.9 வில்லங்க சான்று 01.01.1975 - 03.03.2020 |

4.மேற்படி ஆவணங்களை எனது தரப்பு சான்றாவணங்களாக ஏற்றுக்கொண்டு

தாவா தள்ளுபடி செயய வேண்டுமாய் கேடடுக்கொள்கிறேன்.

**வாதி தரப்பு குறுகககு விசாரணை**

1.நான் தாக்கல் செய்துள்ள பி.சா.ஆ.2 முதல் பி.சா.ஆ.9 ஆவணங்களை பற்றி எனக்கு 10 ஆண்டுகளுக்கு மேலாக தெரியும். இந்த ஆவணங்கள் என்னிடத்தில் தான் இருந்தது என்றால் சரிதான். ஆவணங்கள் குறித்து பதிலுரையில் கூறியுள்ளேனா என்றால் கூறவில்லை. சீனன் என்கின்ற சீனிவாசன்

22.12.2016 அன்று இறந்துவிட்டார். சீனன் என்கின்ற சீனிவாசன் எனது சித்தப்பா. சீனனின் வாரிசு சான்றிதழ் யார்யார் பெயர்கள் உள்ளது என்று தெரியுமா என்றால் எனககு ஞாபகமில்லை.

2.நான் வக்கீல் குமஸ்தாவாக 20 ஆணடுகளாக உள்ளேன். முனிரததினம் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பற்றி தெரியுமா என்றால் தெரியும். வா.சா.ஆ.10 சீனன் என்கின்ற சீனிவாசனின் வாரிசு சான்றிதழில் உஷா மகள் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். உஷாவின் கணவர் தான் வாதி என்றால் சரிதான். வா.சா.அ.10 தாக்கல் செய்த பின்புதான் சீனனின் வாரிசு உஷா என்று தெரியவந்தது, வா.சா.அ.10 வாரிசு சான்றிதழிலில் சீனன் லேட் துரைசாமி மகன் 22.12.2016 அன்று இறந்ததாக குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். இதில் குறிப்பிட்டுள்ள துரைசாமியின் மகன் சீனன் எனது சித்தப்பா என்றால் சரியல்ல. சீனிவாசன் தான் எனது சித்தப்பா. எனது சித்தப்பா சீனிவாசன் 22.12.2016 அன்று வீட்டில் தான் காலமானார். எனது சித்தப்பா சீனிவாசனின் இறப்பு சான்றிதழ் உள்ளதா என்றால் உள்ளது அதை நீதிமன்றத்தில்தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வதுபோல் சீனிவாசனின் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றாலும் இவ்வழக்கிற்காக தாக்கல் செய்தேன் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது சித்தப்பாவை சீனன் என்றும் சீனிவாசன் என்றும் அழைப்பார்கள் இவ்வழக்கிற்காக இல்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3.நான் தான் எனது சித்தப்பா சீனிவாசனின் 2ம் நிலை வாரிசு என்பதை நிரூபணம் செய்வதற்காக ஏதேனும் ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால்இல்லை. வாதி தரப்பில் கிராம நிர்வாக அலுவரை வா.சா.ஆ.3ஆக விசாரணை செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். அவர்கள் தரப்பில் என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்தார்கள் என்ற விவரம் தெரியும். அவர்கள்தாக்ல் செய்த அனைத்து ஆவணங்களிலும் சர்வே எண்.12/எ1 சீனன் என்பவர் பெயரில் உள்ளதாக தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 முதல்விசாரணையில் 1984லிருந்து 2013 வரை சர்வே எண்.12/எ1 க்கு சம்பந்தப்பட்ட ஆவணங்கள் சீனன் பெயரில் உள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றால் சரிதான்.

4.வாதி சீனனிடமிருந்து எப்பொழுது கிரயம் பெற்றார்கள் என்ற விவரம் தெரியாது. இவ்வழக்கு தாக்கல் செய்தபின்னபு வாதி சீனனிடமிருந்து 2008ல் கிரயம் வாங்கிய விவரம் தெரியவந்தது. வா.சா.ஆ.2ல் உள்ள புகைப்படத்தில் உள்ளது எனது சித்தப்பா என்றால் புகைப்படத்தை மாற்றி கூட ஒட்டியிருக்கலாம். புகைப்படத்தில் உள்ளவர் எனது சித்தப்பா இல்லை. வா.சா.ஆ.2 தாக்கல் செய்த பின்பு வா.சா.ஆ.2ல் உள்ள போட்டோவில் உள்ளவர் எனது சித்தப்பா இல்லை என்பதற்காக ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.2ன் உண்மை நகலை சார்பதிவாளர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்து வாங்கி பார்த்தேனா என்றால் நான் வாங்கி பார்க்கவில்லை.

5.வா.சா.ஆ.2ல் குறிப்பிட்டுள்ளவாறு வாதியின் மனைவி உஷா மற்றும் சரஸ்வதி என்பவருக்கு விற்பனை செய்த விவரம் தெரியுமா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. வாதியின் மனைவி குடியாத்தம் சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.128/2017 என்ற வழக்கு எனக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். வாதி தனது மனைவி உஷா பெயருக்கு தானசெட்டில்மெணட் ஆவண எண்.2843/2017 படி எழுதிகொடுத்துள்ளார். இந்த ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பின்பு தான் தானசெட்டில்மெண்ட் ஆனது பற்றி தெரியும்.

6.எனது சித்தப்பா இறந்தபின்பு வாதி தாககல் செய்த இந்த வழக்கிற்கு பின்னிட்டு சீனன் வாதிக்கு எழுதிகொடுத்த வா.சா.ஆ.2 கிரய பத்திரத்தை ரத்து செய்யும்படி ஏதேனும் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 22.12.2016 அன்று எனது சித்தப்பா இறந்த பின்பு வருவாய் ஆவணங்களை சரிபார்த்த போது ஆவணங்கள் போலியானது என்று தெரியவந்தபோது வழக்கறிஞர் முனிரத்தினம் என்பவருக்கு அனுப்பினேன். அதன் பின்னிட்டு அந்த ஆவணத்தை ரத்துசெய்ய எந்த சட்ட நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான்.

7.நீ.ம.சா.ஆ.3 சிட்டாவில் துரைசாமி மகன் சீனன் என்பவரின் பெயர் நீக்கப்பட்டு சர்வே எண்.12/எ1க்கு வாதி முனிரத்தினம் பெயர் சேரக்க்பட்டுள்ளது என்றால் சரிதான். 1975லிருந்து 2020 வரை சீனிவாசன் பெயர் தான் விவல்லங்க சான்றிதழில் உள்ளது. அதுபோல் எந்த வில்லங்கமும் தாக்கல் செய்யவில்லை வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பி.சா.ஆ.8 மற்றும் பி.சா.அ.9 வில்லங்க சான்றிதழில உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும். பி.சா.ஆ.8 வில்லங்க சான்றிதழ் படி 05.01.1987ல் குடியாத்தம் உரிமையியல் நீதிமன்றத்தால் சீனிவாசனின் சொத்தை அட்டாச்மெண்ட் செய்தார்கள் என்றால் சரிதான். 13.06.2013 அன்று வாதி முனிரத்தினம் சரஸ்வதிக்கு தானசெட்டில்மெண்ட் 20 செணட் எழுதிவைத்துள்ள விவரம் அதில் உள்ளது என்றால் சரிதான். அதே சர்வே எண்ணில் 12.11.2013 அன்று சரஸ்வதி என்பவர் குடியாத்தம் ஆனந்த குழந்தைகள் மறுவாழ்வு மையத்திற்கு கிரய பத்திரம் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். பி.சா.ஆ.9 வில்லங்க சானறிதழில் 24.11.2008 சீனன் முனிரத்திற்கு எழுதிவைத்துள்ள விவரம் அதில் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் எனது சித்தப்பா சீனிவாசன் இறந்த பின்பு தான் அந்த விவரம் தெரியவந்தது.

8.13.06.2013 அன்று 20 செண்ட் நிலத்தை வாதி முனிரத்தினம் சரஸ்வதி என்ற பெயருக்கு எழுதிவைத்தார் என்றால் சரிதான். அதே சர்வே எண்ணில் 12.11.2013 அன்று சரஸ்வதி என்பவர் குடியாத்தம் ஆனந்த குழந்தைகள் மறுவாழ்வு மையத்திற்கு கிரய பத்திரம் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். 01.06.2017 அன்று முனிரத்தினம் உஷா பெயருக்கு சர்வே எண்.48/1எ, சர்வே

எண்.49/2எ தானசெட்டில்மெணட் எழுதிவைத்தார் என்றால் சரிதான். மேற்சொன்ன விவரங்கள் 2016ல் எனது சித்தப்பா இறந்தபின்பு தான் தெரியவந்தது என்றால் சரிதான். 2014லிருந்து 2023 இன்றையதேதிவரை வாதி முனிரத்தினம் அவர் மனைவி உஷா வாதி கிரயதாரரான சரஸ்வதி, சர1வதியிடம் கிரயம் பெற்ற குடியாத்தம் ஆனந்த மறுவாழ்வு மையம் ஆகியோர்களுக்கு எழுதிகொடுத்த பத்திரம் செல்லத்தக்கதல்ல என்று ரத்து செய்யவும் அது போர்ஜரியாக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்று நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை.

9.2017ல் வாதி நிலத்தில் தகராறு செய்ததற்கான காவல் நிலையத்தில் புகார் சம்மந்தமாக நான் முன் ஜாமின் பெற்றேனா என்றால் இல்லை. நான் முன்ஜாமின் பெற்றது வேறு ஒரு வழக்கிற்காக. நான் முனிரத்திடம் தகறாறு செய்ததற்காகதான் முன் ஜாமின் பெற்றேன் ன்றாலும் காவல் துறையின் அது சிவில் வழக்கு என்பதால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்பதால் முன் ஜாமின் ரத்து செய்யப்பட்டது என்றால் சரியல்ல. முன் ஜாமின் மனு ரத்துசெய்யப்பட்ட ஆவணத்தை தாக்கல் செய்தால் தான் உண்மை விவரம் தெரியவரும் என்பதால் அதை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் தாக்கல் செய்துள்ளேன்.

10.நான் சொல்வது போல் அந்த ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சீனிவாசன் உயிருடன் இருக்கும் பொழுது சர்வே எண்.12/எ1க்கு உணடான வருவாய் ஆவணங்கள் வாதி பெயருக்கு பெயர் மாற்றம் செய்யபட்டது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. சினிவாசன் உயிருடன் இருக்கும்போழுது கிரயம் பெற்ற நபர் பெயருக்கு வருவாய் ஆவணஙகள் பெயர் மாற்றம் செய்யப்பட்டு சுவாதீனத்தில் இருந்ததை சீனிவாசன் உயிருடன் இருக்கும்பொழுது ஆட்சேபணை செய்யாமல் இருந்தார் என்றாலும் அவர் இறந்தபின்பு போலியான ஆவணங்களை தயார் செய்து வாதியை தொந்தரவு செய்துவருகிறேன் என்றால் சரியல்ல. நான் பிறந்ததிலிருந்தே காக்கா தோப்பு கிராமம் மேல்முட்டுகூர் மதுராவில் தான் இருக்கிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.10 சீனன என்பவரின் வாரிசு சான்றிதழில் குடியாததம் வட்டம் காக்கா தோப்பு கிராமம் மேல்முட்டுகூர் மதுராவில் வசித்து வந்த சீனன் தகப்பனார் பெயர் லேட் துரைசாமி என்பவர் 22.12.2016ல் இறந்தவர் எனது சித்தப்பாவை தவிர வேறு யாரோ நபர் உள்ளாரா என்றால் எனக்கு ஞாபகமில்லை.

11.வா.சா.ஆ.6 மற்றும் வா.சா.ஆ.7 ஆதார் அட்டை மற்றும் வாக்காளர் அடையாள அட்டையில் உள்ள சீனன் தகப்பனார் பெயர் துரைசாமி, மேல்முட்டுகூர் காக்கா தோப்பு கிராமத்தில் வசிதது வந்ததாக உள்ளது. அதில் புகைப்படத்தில் உள்ளவர் எனது சித்தப்பா என்றால் சரியாக தெரியவில்லை. எனது சித்தப்பா இவர்தான் என்பதற்கு ஏதேனும் ஆதாரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. எனது சித்தப்பா இறந்த பின்பு அவரது ஒரே பெண் வாரிசான உஷா

என்பவர் சொத்தை அபகரிக்கும் நோக்கத்தோடு பொய்யாக சங்கதிகளோடு பதிலுரை தாக்கல் செய்துள்ளேன் என்றால்ச ரியல்ல. வாதி என்னுடைய மச்சான் அவருடைய தங்கையை நான் திருமணம் செய்துள்ளேன். வாதியின் தாயார் எனது அப்பாவுடன் பிறந்த தங்கை. தாவா சொத்தை சீனனிடமிருந்து முறையான பிரதிபலனுக்குதான் கிரயம் பெறப்பட்டது என்றும் நான் பொய்யான சங்கதிகளை கூறி பதிலுரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சீனனுக்கு கிராமத்தில் சீன்ன மற்றும் சீனிவாசன் என்று 2 பெயர்கள் உள்ள காரணத்தை பயன்படுத்திக்கொண்டு அவருடைய சொத்தை வாதியை அனுபவிக்கவிடாமல் தொந்தரவு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. வாதி கிரயம் பெறும்பொழுது சீனனின் அடையாள அட்டை ஆதார்அட்டை ஆகியவைகளையும் வருவாய் ஆவணங்களையும் சரிபாரத்து முறையான பிரதிபலனுக்கு தான் கிரயம் பெற்றார் என்றால் சரியல்ல. நான் 20 ஆண்டுகளாக வழக்கறிஞர் குமஸ்தாவாக பணிசெயவதுவருவதால் என்னுடைய செல்வாக்கையும் சட்ட நினுக்கங்களையும் தெரிந்துகொண்டு வாதிக்கு வீண் தொந்தரவு செயதவருகிறேன் ன்றால் சரியல்ல. ஆவணங்கள் படியும் அனுபவத்தின் படியும் வாதிக்கு சொந்தமான சொத்தை நான் எந்த தொந்தரவு செய்யக்கூடது என்றும் செய்தால் சட்டப்படி தப்பு என்றால்சரியல்ல. முதல் பிரமாண வாக்குமூலத்திலும் பிரமாண வாக்குமூலத்திலும் உள்ள சங்கதிள் பொய்யானவை என்றால் சரியல்ல. எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை மறைத்து தற்போது பொய்யான சங்கதிகளோடு அந்த ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் முன்னிலையில் எந்த உரிமையும் கோரமுடியாது என்றால் சரியல்ல, தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read
over of the deponent and acknowledged
by her/him to be correct.

Sd/.M.N.RAJANANDHIVARMASIVA
DISTRICT MUNSIF